**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர்-நாராயணசாமி**

**தேதி 06.11.2024 நேரம் மாலை 6.10 மணி**

---

*தலைப்புச் செய்திகள்*

- **அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திரு. டொனால்ட் ட்ரம்பிற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.**
- **கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு நிதி ஆதரவு அளிப்பதற்கான பிரதமரின் வித்யா லட்சுமி திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**
- **வேளாண்சார் துறையினருக்கு, குறைந்த வட்டியில், கடன் கிடைப்பதை உறுதிப்படுத்த, அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாக, மத்திய அரசின் நிதி சேவைகள் துறை கூறியுள்ளது.**
- **நீர் நிர்வாகம், மற்றும், நீர் சேமிப்பு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், நிதி ஆயோக் ஏற்பாடு செய்துள்ள, 15 நாள் ஜல உற்சவம் இன்று தொடங்கி உள்ளது.**

---

*மோடி-ட்ரம்ப் (9)*

**அமெரிக்க அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றதற்காக, திரு. டொனால்ட் ட்ரம்பிற்கு, பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். திரு. ட்ரம்பின் முந்தைய பதவிக் கால வெற்றிகள் தொடரும் வேளையில், இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் ஒத்துழைப்பை புதுப்பித்துக் கொள்ள, தாம் ஆர்வம் கொண்டுள்ளதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். இருநாட்டு மக்களின் நலன்களையும், உலக அமைதி, ஸ்திரதன்மை, மற்றும், வளத்தையும் மேம்படுத்துவதில், திரு.**

**ட்ரம்ப் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றும் பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.**

**-------------------------------**

<u>*ஜெய்சங்கர்* (19)</u>

**வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று கான்பெர்ராவில், ஆஸ்திரேலிய பிரதமர் திரு. ஆண்டனி அல்பனீசை சந்தித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடியின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை உறவுகளை ஆழப்படுத்துவதில், ஆஸ்திரேலிய பிரதமரின் வழிகாட்டுதல்களை தாம் மிகவும் மதிப்பதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில், டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார். ஆஸ்திரேலியா-இந்தியா நாடாளுமன்ற நட்புறவுக் குழுவின் உறுப்பினர்களையும் இன்று வெளியுறவு அமைச்சர் சந்தித்து கலந்துரையாடினார். இருநாடுகளுக்கும் இடையே, வலுவான அரசியல், பொருளாதார, மற்றும், மக்கள் நிலையிலான உறவுகள் இருக்க வேண்டும் என, இக்குழுவின் உறுப்பினர்கள் வெளியிட்ட உணர்வை அவர் பாராட்டினார். கான்பெர்ராவில், நியூசிலாந்து நாட்டின் வெளியுறவு அமைச்சர் திரு. வின்ஸ்டன் பீட்டர்-சையும், டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார். கல்வி, தொழில்நுட்பம், வேளாண்மை, மக்கள் நிலையிலான உறவுகள் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு குறித்து, இந்த சந்திப்பின் போது விவாதிக்கப் பட்டது. இந்தோ-பசிபிக் பிராந்தியம், மற்றும், உலக அளவிலான பிரச்சனைகள் குறித்தும், இரு அமைச்சர்களும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர். கான்பெர்ராவில், ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு அமைச்சரையும் டாக்டர் ஜெய்சங்கர் சந்தித்து பேசினார்.**

**-------------------------------**

அமைச்சரவை (14)

**கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு நிதி ஆதரவு அளிப்பதற்கான பிரதமரின் வித்யா லட்சுமி திட்டத்திற்கு, மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் அமைச்சரவைக் கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதை தெரிவித்தார். நிதிப் பிரச்சனையால் எந்த ஒரு இளைஞருக்கும் தரமான உயர்கல்வி கிடைக்காமல் போய்விடக் கூடாது என்ற அடிப்படையில், இத்திட்டம் கொண்டுவரப் படுவதாகவும், இதன்மூலம், மாணவர்கள் உயர்கல்வி பயில, உத்தரவாதம் இன்றி கடன் பெறலாம் என்றும், அவர் கூறினார். இந்திய உணவுக் கழகத்திற்கு, 10 ஆயிரத்து 700 கோடி ரூபாய் பங்கு மூலதனம் வழங்கும் உத்தேசத்திற்கும், மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்திய உணவுக் கழகத்தின் செயல்பாட்டுத் திறன்களை மேம்படுத்துவதில், இது முக்கிய நடவடிக்கையாக அமையும் என்று, அமைச்சர் திரு. வைஷ்ணவ் தெரிவித்தார்.**

**------------------------------**

வேளாண் கடன் (13)

**வேளாண்சார் துறையினருக்கு, குறைந்த வட்டியில், கடன் கிடைப்பதை உறுதிப்படுத்த, அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாக, மத்திய நிதி சேவைகள் துறைச் செயலர் திரு. எம். நாகராஜ் கூறியுள்ளார். கால்நடை வளர்ப்பு, மீன்வளம், பால்வளம் உள்ளிட்ட வேளாண்சார் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு, தடையற்ற விதத்தில் கடன் கிடைப்பதை உறுதிப்படுத்தும் முயற்சிகள், எந்த அளவிற்கு முன்னேறி உள்ளன என்பது குறித்து, அரசுத் துறை வங்கிகள், நபார்டு வங்கி, மற்றும், மாநில அளவிலான வங்கியாளர் குழுக்களுடன் அவர் மறுஆய்வுக் கூட்டம் நடத்தினார். வேளாண் துறையின் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும், ஊரக பகுதிகளில் வேலை வாய்ப்பை அதிகரிப்பதிலும், வேளாண்சார் துறைகளுக்கு முக்கிய பங்கு இருப்பதால், வங்கிகளும், மாநில அரசுகளும்,**

**இந்த துறையினருக்கான கடன் வசதிகளை அதிகரிப்பதில், கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.**

**-----------------------------**

<u>உள்துறைச் செயலர் (13)</u>

**மத்திய உள்துறைச் செயலர் திரு. கோவிந்த மோகன் இன்று குவஹாத்தியில், அசாம் மற்றும் மேகாலயா மாநிலங்களைச் சேர்ந்த அதிகாரிகளுடன், எல்லைப் பிரச்சனைகள் குறித்து, ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இருமாநில தலைமைச் செயலர்கள், மற்றும், மூத்த அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். வடகிழக்கு பிராந்தியத்தின் எல்லைப் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண மத்திய அரசும், அசாம் மாநில அரசும், ஏற்கனவே பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, பெரும்பாலான பிரச்சனைகளுக்கு சுமூக தீர்வு காணப் பட்டுள்ள நிலையில், மத்திய உள்துறைச் செயலர் தலைமையிலான இன்றையக் கூட்டம், இம்முயற்சிகளுக்கு மேலும் வலு சேர்ப்பதாக அமைந்து இருந்தது. உள்துறைச் செயலர் திரு. கோவிந்த மோகன் இன்று, அசாம் மற்றும் அருணாச்சல பிரதேசத்திற்கு இடையிலான, எல்லைப் பிரச்சனைகள் குறித்தும், இருமாநில தலைமைச் செயலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்.**

**-----------------------------**

<u>ஜல் உற்சவ் (14)</u>

**நீர் நிர்வாகம், நீர் சேமிப்பு மற்றும் நீடித்த நீர்வளத்தின் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நிதி ஆயோக் ஏற்பாடு செய்துள்ள 15 நாள் ஜல உற்சவம் இன்று தொடங்கி உள்ளது. நதி உற்சவம் போல, நீர் உற்சவம் ஒன்றை நடத்தலாம் என, கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற தலைமைச் செயலர்கள் மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி வழங்கிய ஆலோசனை அடிப்படையில், இந்த இயக்கத்திற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. மத்திய ஜல்சக்தி அமைச்சகம் மற்றும் ஜல்ஜீவன் இயக்கத்தின் ஆதரவுடன், வளர்ச்சி ஆர்வம் அதிகம்**

உள்ள 20 மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில் ஜல் உற்சவ் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. பல்வேறு இடங்களில், நீர்வள சொத்துக்களுக்கு புனிதக் கயிறு கட்டி, பிரபலங்கள், மற்றும், உள்ளூர் பிரமுகர்கள் இந்த இயக்கத்தை தொடக்கி வைத்தனர். அந்தந்த மாவட்டங்கள் மற்றும் வட்டாரங்களில், நீர்வள சொத்துக்கள் பற்றிய தகவல் ஆவணங்களையும் இவர்கள் வெளியிட்டனர்.

------------------------------

<u>*பிரச்சாரம்-ஜார்கண்ட்*</u> (18)

வரும் 13ஆம் தேதி முதல்கட்ட சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள ஜார்கண்டில், அரசியல் கட்சிகள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. ஜேஎம்எம், காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுமே, பொய்யான வாக்குறுதிகள் மூலம் ஜார்கண்ட் மக்களை ஏமாற்றி வருவதாக, சட்டமன்றத் தேர்தலுக்கான பிஜேபி மேலிடப் பொறுப்பாளர் திரு. சிவ்ராஜ் சிங் சவுகான் இன்று, பிரச்சாரங்களில் ஈடுபட்டு பேசுகையில் கூறினார். மூத்த ஜேஎம்எம் தலைவரும், ஜார்கண்ட் முதலமைச்சருமான திரு. ஹேமந்த் சோரேன், ஜகன்நாத்பூர் சட்டமன்றத் தொகுதியில், பிரச்சார பொதுக் கூட்டத்தில் பேசுகையில், தம்மை பதவியில் இருந்து இறக்க, பிஜேபி, சதித் திட்டம் தீட்டி இருப்பதாக குற்றம் சாட்டினார். ராஷ்ட்ரிய ஜனதா தளம், சிபிஐ-எம்எல் உள்ளிட்ட கட்சிகளின் முக்கிய தலைவர்களும், ஜார்கண்ட் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர். பிரதமர் திரு. நரேந்திர மோடி, வரும் 10ஆம் தேதி, ஜார்கண்டில், பிரச்சார பொதுக் கூட்டங்களில் உரையாற்ற இருக்கிறார். அதற்கு முன்பாக, வரும் 8-9 ஆகிய தேதிகளில், பிரதமர், மஹாராஷ்ட்ர மாநிலத்தில், சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார். மஹாராஷ்ட்ர சட்டமன்றத் தேர்தல் ஒரே கட்டமாக, வரும் 20ஆம் தேதி நடைபெற உள்ளது.

------------------------------

புதுச்சேரி-கழிவுநீர் (14)

**பாதாள சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் உள்ள வீடுகள், மற்றும் வியாபார நிறுவனங்களில், மலக்கசடு கழிவு நீர் தொட்டியை 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுத்தம் செய்ய வேண்டும் என, உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு. சுரேஷ்ராஜ் வலியுறுத்தி உள்ளார். அவ்வாறு சுத்தம் செய்யாவிட்டால், துர்நாற்றம், மற்றும் சுகாதார சீர்கேடு ஏற்படக்கூடும் என்பதால், 3 ஆண்டுகளுக்கும் மேலாக கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்யாதவர்கள், இதற்கான நகராட்சி நிர்வாகத்தின் வாகனத்தை பயன்படுத்தி, சுத்தம் செய்யலாம் என்றும், இதற்கு, 3 ஆயிரத்து 800 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் செய்திக் குறிப்பு ஒன்றில் அவர் தெரிவித்துள்ளார். கழிவுநீர் தொட்டியை சுத்தம் செய்ய, நகராட்சியின் அனுமதி பெறாத வாகனங்களை பயன்படுத்த வேண்டாம் என்றும், மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றுவது சட்டப்படி குற்றம் என்பதால், பணியாளர்களை கழிவுநீர் தொட்டிக்குள் இறக்கி சுத்தம் செய்ய வேண்டாம் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.**

**------------------------------**

யுவ உற்சவ் (14)

**15 முதல் 24 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான, இளையோர் கலை விழா போட்டிகள், புதுச்சேரியில் வரும் 12, 14 ஆகிய தேதிகளில் நேரு யுவகேந்திரா சார்பில் நடைபெற உள்ளன. பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, கவிதைப் போட்டி, மொபைல் புகைப்பட கலை ஆகிய போட்டிகள் வரும் 12ஆம் தேதி, கதிர்காமம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், கிராமிய நடனம், அறிவியல் மேளா, மற்றும், பரிசளிப்பு விழா, வரும் 14ஆம் தேதி, மூலகுளம் கிறிஸ்ட் பொறியியல் கல்லூரியிலும் நடைபெற உள்ளன. போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் புதுச்சேரியை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்றும், மை-பாரத் போர்ட்டல் செயலியில் தங்களின் பெயர்களை பதிவு செய்திருத்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த யுவ உற்சவ**

**போட்டிகளில் கலந்து கொள்வதற்கான விண்ணப்பங்களை, நேரு யுவகேந்திரா அலுவலகத்தில் பெற்றுக் கொண்டு, வரும் 9ஆம் தேதி மாலை 5 மணிக்குள் விண்ணப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

**-------------------------------**

ஐபிஎல் ஏலம் (14)

**2025ஆம் ஆண்டு ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளுக்கான மெகா ஏல நடைமுறைகள், சவுதி அரேபியாவின் ஜெட்டா நகரில், வரும் 24, 25 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளன. பாகிஸ்தான் தவிர, இதர கிரிக்கெட் நாடுகளில் இருந்தும் தற்போது கிரிக்கெட் பிரபலமாகி வரும் அமெரிக்கா, கனடா, இத்தாலி உள்ளிட்ட நாடுகளில் இருந்தும், மொத்தம் ஆயிரத்து 574 கிரிக்கெட் வீரர்கள், இந்த ஏலத்திற்கு பெயர் பதிவு செய்து கொண்டுள்ளனர். ஐபிஎல் கிரிக்கெட் அணிகள், தலா 25 வீரர்கள் வரை, ஏலம் எடுக்கலாம் என்றும், மொத்தம் 204 இடங்கள் இவ்வாறு நிரப்பப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. ஐபிஎல் ஏல நடைமுறைகள் சவுதி அரேபியாவில் நடைபெறுவது, இந்தியாவிற்கும், சவுதி அரேபியாவிற்கும் இடையே, விளையாட்டு, மற்றும், கலாச்சாரப் பரிமாற்றங்களும், மக்கள் நிலையிலான தொடர்புகளும் அதிகரித்து வருவதன் அடையாளம் என்று சவுதி அரேபியாவிற்கான இந்திய தூதர் டாக்டர் சுகேல் கான் கூறியுள்ளார்.**

**-------------------------------**

*சாரதா சின்ஹா* (9)

**புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் நேற்றிரவு காலமான, பீகாரை சேர்ந்த நாட்டுப்புற இசைக் கலைஞர் சாரதா சின்ஹாவின் இறுதிச் சடங்குகள் நாளை பட்னாவில், முழு அரசு மரியாதைகளுடன், நாளை நடைபெற உள்ளன. பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ் குமார் இதை அறிவித்துள்ளார். இறுதிச் சடங்குகள் பட்னாவில், கங்கைக் கரையில் உள்ள குலாபி காட் படித்துறையில் நடைபெறும் என, சாரதா சின்ஹா குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். சாரதா சின்ஹாவின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய சுகாதார அமைச்சருமான திரு. ஜே.பி நட்டா, நாளை பட்னா செல்கிறார்.**

---------------------------------